சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். 75/2021

**PW 1 ராஜமாணிக்கம்** **25.10.2025**

<u>மனுவின் பேரிலான குறுக்கு விசாரணை</u>

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். பிராம்சரி நோட்டில் குறிப்பிட்டு யாருக்கு எழுதி கொடுத்ததாக கண்டுள்ளதா என்றால் இல்லை. பிராம்சரி நோட்டை முருகானந்தம் எழுதி கொண்டார். பிராம்சரி நோட்டில் எழுதுவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அடித்தல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதற்காக பணம் கொடுக்கப்படுகிறது என்ற இடத்தில் முகவரி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், பிராம்சரி நோட்டில் கண்ட விவரங்களை முருகனாந்தமும் அவரது அண்ணனும் எழுதிக் கொண்டார்கள். பிராம்சரி நோட் என் முன்னால் தான் எழுதப்பட்டது என்று சொன்னால் சரிதான். 02.07.2022 ம் தேதியன்று தேங்காய் திருடி சென்றதாக என்னுடைய பெயரிலும் முரளி பெயரிலும் புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான், அதன் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பூர்த்தி செய்யப்படாத பிராம்சரி நோட்டின் நகலை ஒரு பொன்னுச்சாமியிடம் கொடுத்தேன். என் பெயரிலும் பொன்னுசாமி பெயரிலும், முரளி பெயரிலும் 2 ம் பிரதிவாதி பொள்ளாச்சி தாலூக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். பூர்த்தி செய்யப்படாத பொன்னுசாமியிடம் கொடுத்த புகைப்பட காப்பியின் அசலை தான் பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. அதனால் தான் பிராம்சரி நோட்டில் கண்ட வாசகங்கள் மாறுபட்டு உள்ளது என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் மேற்கண்ட பூர்த்தி

செய்யப்படாத பிராம்சரி நோட்டை பற்றி கூறியுள்ளேன் என்றும் அதனை மறுத்து பதில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முரளியை இந்த வழக்கில் விசாரிக்கின்றேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் தான் கேட்க வேண்டும். முருகானந்தம் என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றும், நான், முரளி, அர்ஜீனன், 1ம் பிரதிவாதி ஆகியோர் கூட்டு சேர்ந்து பிராம்சரி நோட்டை தயாரித்து வழக்கு தாக்கல் செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. முருகானந்தம் என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றும் முருகானந்தம் இறந்துவிட்ட நிலையில் வாரிசுகள் எந்த பணமும் தரதேவையில்லை என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி